

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.3.2026) தனது 73–வது பிறந்தநாளையொட்டி, கோபாலபுரம் இல்லத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.3.2026) முகாம் அலுவலகத்தில் தனது 73–வது பிறந்தநாளை குடும்பத்தினருடன் கொண்டாடினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.3.2026) தனது 73–வது பிறந்தநாளையொட்டி சிஐடி காலனி இல்லத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தியபோது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் துணைவியார் திருமதி ராஜாத்தி அம்மாள் அவர்கள் முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார். உடன், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை யொட்டி, அண்ணா அறிவாலயத்தில், நேற்று முன்தினம் (1.3.2026) புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர் வி.நாராயணசாமி சந்தித்து, வாழ்த்து தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் ஜோ. அருண் சந்தித்து, வாழ்த்து தெரிவித்தார். உடன் அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் உள்ளார்.



சென்னை, அண்ணா அறிவாலயத்தில், நேற்று முன்தினம் (1.3.2026) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை யொட்டி, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா மற்றும் நிருவாகிகள் சந்தித்து, வாழ்த்து தெரிவித்தனர்.

## “தமிழ்நாடு தலைகுனியாது” தேர்தல் பரப்புரை!

# “All roads lead to Anna Arivalayam”- ஆங்கில நாளேடுகள் புகழாரம்!

**15 லட்சம் போடுவதாக சொல்லி ஏமாற்றினார் மோடி. சொல்லாமலே 5,000 ரூபாய் அள்ளிக் கொடுத்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின் - அனல் பறந்த பரப்புரை.**

கழகத்தின் சார்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் “தமிழ்நாடு தலைகுனியாது” தேர்தல் பரப்புரைக் கூட்டமானது நேற்று 9 சட்டமன்றத் தொகுதிகளில் சிறப்பாக நடைபெற்றது.

கடலூர் தொகுதியில் கம்பம் செல்வேந்திரன், திருவொற்றியூர் தொகுதியில் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், ஓசூர் தொகுதியில் கலாநிதி வீராசாமி, கெங்கவல்லி தொகுதியில் கோவி செழியன், பழனி தொகுதியில் திருமதி. கனிமொழி சோமு, திருவையாறு தொகுதியில் மருது அழகுராஜ்,

குளித்தலை தொகுதியில் ஏ.கே.எஸ். விஜயன், திருவாடானை தொகுதியில் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன்,

பாளையங்கோட்டை தொகுதியில் எம்.எம்.அப்துல்லா ஆகியோர் கலந்து கொண்டு கழகத்திற்கு ஆதரவு திரட்டினர்.

கம்பம் செல்வேந்திரன் அவர்கள் பேசுகையில், “பெண்களுக்கு அளித்து வரும் மாதம் ரூ.1000 என்பது உதவி தொகை அல்ல அது மகளிரின் உரிமைத் தொகை என குறிப்பிட்டவர், ஒன்றிய பா.ஜ.க. அரசு பட்ஜெட் நிதி ஒதுக்கீட்டில் ‘ஒரு கண்ணில் வெண்ணை மறு கண்ணில் சுண்ணாம்பு’ தடவி நம்மை வஞ்சித்து வருகிறது என சாடினார்.

கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் அவர்கள் “ஆங்கிலப் பத்திரிகைகள் அனைத்தும் “All roads lead to Anna Arivalayam” என்று எழுதுகின்றன என குறிப்பிட்டார்.



மேலும் “2022 - 2025 வரை 27,50,000 EPFO கணக்குகள் திறக்கப்பட்டுள்ளன. 27 லட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளதற்கு இதுவே சாட்சி” என எடுத்துரைத்தார். அதோடு அ.தி.மு.க. முழுமையாக பா.ஜ.க.வில் கரைந்து கொண்டு இருப்பதாகவும் விமர்சித்து பேசினார்.

குளித்தலையில் பேசிய ஏ.கே.எஸ். விஜயன் அவர்கள் “பல ஆண்டுகளுக்கு முன்பு நரேந்திர மோடி அவர்கள் ஒவ்வொருவரின் வங்கி கணக்கிலும் 15 லட்சம் ரூபாய் செலுத்துவோம் என்று கூறி மக்களை ஏமாற்றினார்.

ஆனால் எந்தவித அறிவிப்பும் இன்றி நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய பா.ஜ.க.வின் சதியை முறியடித்து ஒரே இரவில் 1.31 கோடி மக்களுக்கு 5,000 ரூபாயை அள்ளி வழங்கினார்” என்பதை குறிப்பிட்டவர், “அதிகார சக்திகளுக்கு எதிராக தைரியமாக குரல் கொடுத்து நிற்கும் ஒரே தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களே” என அழுத்தமாக பதிவு செய்தார்.

ஒவ்வொரு கூட்டத்திலும் நமது வளர்ச்சியை, நலத்திட்டங்களை தடுத்து வீழ்ச்சியில் தள்ள வரும் டெல்லி டப்பா எஞ்சினை விரட்டுவோம்.

தமிழ்நாட்டை என்றும் தலைகுனிய விடமாட்டோம் என உறுதி எடுக்கப் பட்டது.

பொதுமக்களின் ஏகோபித்த ஆதரவோடு வெற்றிப் பரப்புரையாக மாறி உள்ளது ‘தமிழ்நாடு தலைகுனியாது’ பரப்புரை.